**கனேடிய மடல்**

# அண்டப்புழுகர்களை வென்ற ஆகாசப் புழுகர்கள்

புலிகள் ஆபத்தான பிராணிகள் என்றால் அவர்களின் ஆதரவாளர்கள் இன்னொரு ரகம்... வினோதமான பிராணிகள். இவர்களை எல்லாம் விழுங்கி விடக் கூடிய ரகம் ஒன்றுண்டு.. அதுதான் புலிகளின் ஊடகங்களில் அரசியல் ஆய்வு எழுதும் 'நுண்ணாய்வாளர்கள்'. விஷ ஜந்துக்கள்! சீமான்கள் வஞ்சகமில்லாமல் 'வாசிப்பவன், கேட்பவன் எல்லாம் காதில் பூ வைத்த இளிச்சவாயன்' என்ற நினைப்பில் கவலையே இல்லாமல் எழுதிக் குவிப்பார்கள். அல்லது வானலைகளில் முழங்கித் தள்ளுவார்கள். இணையம், வானலை, அச்சு வழி ஊடகங்கள் எல்லாம் தமிழ் எழுத்துடன் கூடிய கணனி வைத்திருக்கும் எல்லோரையுமே அரசியல் ஆய்வாளர்கள் ஆக்கித்தொலைத்திருக்கின்றன. அதற்குள் சில மாஜிப் பேராசிரியப் பெருமக்களும் புனைபெயருக்குள் ஒளிந்திருந்து 'எம் பெருமான் கடைக்கண் பார்வை திரும்பாதா?' என 'தினமும் குரல்' எழுப்புவதாக வேறு வதந்திகள்.

புலிகளை விமர்சிப்பவர்களுக்குத்தான் உயிர்ப் பயம் என்று இல்லை. புலிகளுக்கு ஆதரவாக எழுதித்தொலைப்பதைக் கூட சொந்தப் பெயரில் எழுதப் பயந்து புனைபெயரிற்குள் மறைந்திருப்பவர்களும் கூட ஏதோ தங்களை சிங்கள புலனாய்வாளர்களோ, ஒட்டுக்குழுக்களோ மண்டையில் போட்டு விடக் கூடும் என்ற பயத்தில் தான் வாழுகின்றனர்.

இவர்களுடைய ஆய்வுக் கட்டுரைகள்.. இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம்தான். சம்பூரில் புலிகள் அடி வாங்கி தப்பியோடிய முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைத்து 'சம்பூரில் பின்வாங்கல் நோர்வேயை பொறிக்குள் சிக்க வைத்த புலிகளின் தந்திரம்' என்று புதினத்தில் ஆய்வுக்கட்டுரை எழுத இவர்களால் மட்டுமே முடியும்.

புலிகளின் ஆதரவாளர்களை 'அழுது கொண்டே சிரிக்க வைத்து' குஷிப்படுத்தி புல்லரிக்க வைப்பதுதான் இவர்களின் முதன்மையான நோக்கம். அப்புறமாய், அதை தமிழ்ச்செல்வனோ மற்றும் முக்கியஸ்தர்கள் வாசித்து தங்களைப் பாராட்ட வேண்டும் என்றோ, அல்லது தலைவரின் காதில்போட்டு வன்னிக்கு வரவழைத்து தேசப்பற்றாளராக்க வேண்டும் என்ற நோக்கம்.
அப்புறமாய், இதை வைத்தே காசு பண்ணும் ஒரு கூட்டம்.. கனடாவில் பக்கத்திற்கு நூறு டொலர் என்று ஆலையில்லா ஊரில் சக்கரையாக பத்திரிகைகளுக்கு ஆய்வு சப்ளை பண்ணிய 'யாசகனும்' உண்டு. மற்றும்படி முயக்கம், ஈனநாடு எல்லாம் இழுக்க இழுக்க இறுதிவரை...

சிரைச்சேதம் செய்யப்போன கடையில் கிடைத்த ஈனநாட்டில்.. சம்பூரில் யுத்தத்தில் பெரும் திருப்பம்.. தலையங்கம்! புறமுதுகு காட்டியது கூட புலிகளின் புத்திசாலித்தனத்தால் எழுந்த திருப்பம்.. ம்..

சிக்கல் என்னவென்றால்.. ஒரே விசயத்திற்கே புலிகளின் ஒவ்வொரு ஊடகமும் தன் புத்திக்கெட்டியவரையில் வியாக்கியானம் கொடுக்கும்.. ஆய்வாளர்களின் அளப்பு இன்னொரு பக்கம்.. ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் இருக்கும். அது பொதுவானதாக இருக்க வேண்டும் என்ற கவலை யாருக்கும் இல்லை.

முன்பு அரசியல் அவதானிகள் தான் எங்கும் இருந்தார்கள். நல்லூர் திருவிழாவில் நேர்முகவர்ணனை செய்யும் வானொலிக்காரர்கள் மாதிரி.. 'எம் பெருமான் இப்போது தெற்கு வீதியில் வலம் வந்து கொண்டிருக்கிறார். பக்தகோடிகளின் அரோகரா கோஷம் விண்ணைப் பிளந்த வண்ணம் இருக்கிறது. அந்தக் கோஷத்திலே, வானமும் பெருக்கெடுக்குமோ என்ற பயம் தரும் வகையில் கருமேகங்கள் சூழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இதோ.. பக்தை ஒருவர் மலர்களை தட்டிலிருந்து வீசிய வண்ணம்...' ம்.. ரேடியோவைக் கொஞ்சம் கூட்டி வைத்து அங்கப்பிரதிட்டம் செய்ய வேண்டியது தான்.. பக்தியை வானலைகள் ஊடாக அனுப்பிய சாதனை அது.

பின்னால் ஆய்வாளர்கள் வந்து விட்டார்கள்.. செய்தியை ஆராய்ச்சி பண்ணி பகுத்தும் தொகுத்தும் தருவதற்கு.. எம்.ஜி.ஆர் விஞ்ஞானியாகி மின்னலைக் குளிசைக்குள் அடைத்த விளையாட்டு மாதிரி.. செய்தியை சோதனைக் குழாய்களுக்குள் போட்டு கொதிக்க வைத்து குடுவையில் ஒடுங்க வைத்து உப்பும் புளியும் கலந்து...

இப்போது அது கூர்ப்படைந்து, செய்தியில் புலனாய்வு கூட நடக்கிறது. முன்பு இதற்கெல்லாம் மொத்தக் குத்தகை ஏஜண்டாக

**பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

மாமனிதர் சிவராம் இருந்தார். அவர்தான் இதை முழுநேரத் தொழிலாகவே செய்து வந்தவர். இப்போது மூலைக்கு மூலை ஆளாளுக்கு கிளம்பி.. நுண்ணாய்வு, புலனாய்வு என்று புலிகளின் ஒவ்வொரு அசைவுக்கும் வியாக்கியானங்களும் பொழிப்புகளும் தூள் பறக்கிறது.. பத்திரிகை முதல் தொலைக்காட்சி வரைக்கும். அப்புறமாய்.. தட்டச்சித் தட்டச்சித் தினவெடுத்த தோள்களுக்கு வீரம் பிறந்தால்.. இருக்கவே இருக்கிறது திறந்த கடிதம்! வாழ்க்கையில் மொட்டைக்கடிதம் தவிர வேறெதுவும் எழுதியறியா ஆய்வாளர்கள் 'ரொனி பிளயருக்கு ஓர் திறந்த கடிதம்', 'கோபி அண்ணனுக்கு ஓர் திறந்த கடிதம்' எல்லாம் எழுதி புலிகளை 'கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா!' என்று எச்சரிக்கை விடுவதைப் பார்த்தால்.. அடி வயிற்றில் பயம் பற்றிக் கொள்ள.. அட.. சவால் விட்டிருக்கிறானே பாவி.. என்ன நடக்கப் போகிறதோ என்று கலங்கிப் போயிருப்பீர்கள். ஆய்வாளரோ அடுத்த வாரம் 'தமிழினத் துரோகி கருணாநிதிக்கு ஒரு திறந்த மடல்' வரையப் போய் விடுவார்.. உடன்பிறப்பே.. ஈழத்தமிழனின் இரத்த வெள்ளத்தை கண்ட பின்னாலும் கரையாத இரக்கமில்லாத இதயமோ உனக்கு..

இந்த வெத்து வேட்டுக் கூட்டத்தில் ஒன்று சமீபத்தில் அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவுக்கு சவால்விட்டிருக்கிறது. 'எப்.பி.ஐயின் தரம் குறைந்த புலனாய்வு அணுகுமுறை' என்ற தலைப்பில் நிதர்சனத்தில் வெளிவந்த கட்டுரை ஒன்றில்.. வள்ளிபுனத்தில் நடைபெற்ற குண்டுவீச்சில் இறந்த உயிர்களைக் கண்டு உணர்ச்சி பொங்கிய அப்பாவித் தமிழர்களை ஏவுகணைகளைக் காட்டி அவர்களை வாங்கத் தூண்டிவிட்டு அவர்களை அமெரிக்கா கைது செய்துவிட்டு தங்கள் புலனாய்வு வெற்றியாகக் காட்டுகிறது என்று அறிவுக்கொழுந்து ஒன்று கதை அளக்கிறது.

இந்த அளப்பை புலிகளின் ஆதரவாளர்களைத் தவிர வேறெந்த இளிச்சவாயன் நம்புவான்?

எனவே கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவிகளாம். அந்த அப்பாவிகள் ஏவுகணை வாங்கி புலிகளுக்கு அனுப்ப விரும்பினார்களாம். அவர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லையாம் என்பதுதான் அ.கொழுந்துவின் வாதம். சரி.. வள்ளிபுனம் தாக்குதல் நடந்து ஓரிரு மாதங்கள். ஆனால் கைது செய்யப்பட்டவர்களுடன் அமெரிக்க புலனாய்வுப் பிரிவு கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்பு வைத்திருந்ததே என்ற கேள்வியைப் புலிகளின் ஆதரவாளர்கள் கேட்கமாட்டார்கள் என்பது அந்த அ.கொவுக்கு நன்றாகவே தெரிந்ததால், இழுத்து விட்டிருக்கிறது.

இந்த வாதத்தை அமெரிக்காவில் இருந்து புலிகளுக்கு அரசியலமைப்புவரையும் வழக்கறிஞர் குறித்து வைத்துக் கொள்ளலாம். சந்தேக நபர்களுக்காக ஆஜராகும்போது இதை ஆதாரமாகவும் காட்டலாம். வ.பி.கோ 304 படி (வன்னி பீனல் கோட்) நீதிபதி உடனடியாகவே அவர்களை விடுதலை செய்வார்.

இவர்கள் இதையெல்லாம் தமிழில்தானே எழுதுகிறார்கள். ஏன் ஆங்கிலத்தில் எழுதுவதில்லை? அங்கே தானே பிரச்சனை இருக்கிறது. ஆங்கிலத்தில் சம்பூர் பின்வாங்கல் நோர்வேயைப் பொறிக்குள் சிக்க வைத்த தந்திரம் என எழுதிவிட்டு, 'நிபந்தனையற்ற பேச்சுக்கு சம்மதம், தாக்குதலை நிறுத்தச் சொல்லுங்கள்' என்று நோர்வேயிடம் மன்றாட முடியுமா? அல்லது அமெரிக்க புலனாய்வுத் துறை பற்றிய புலிகளின் கருத்து விசாரணையை எவ்வளவு தூரம் பாதிக்கும்.

சமீபத்திய சண்டை நம்ம ஆய்வாளர்களுக்கு ஒரே அவல் சப்ளைதான். புலிகள் வாங்கிக்கட்டிக்கொண்டிருந்தபோதெல்லாம் 'வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் நிஷ்டை கலைக்கப் போகிறார். காடு கலங்கப் போகிறது' என்று...
எம்.ஜி.ஆர் தன் ஆஸ்தான வில்லன்களான அசோகன், வீரப்பா, நம்பியார் போன்றோரிடம் அடி வாங்கும் போது மெதுவான சிரிப்புடன் 'பாருங்கடா, வாத்யார் குடுக்கப் போறார்' என்று காத்திருக்கும் 'ரத்தத்தின் ரத்தங்களின்' எதிர்பார்ப்புக்கு மோசமில்லாமல், உதட்டில் வழிந்த ரத்தத்தை துடைத்து விட்டு பொங்கி வரும் பகைவர் கூட்டத்தை வாத்யார் தனியே துவம்சம் செய்வார்.. அதுபோல, துவண்டு நின்ற ரசிகர் கூட்டத்தை உற்சாகப்படுத்தி இந்த ஆய்வாளர் கூட்டம் சமாளிக்க.. தலைவரும் ரத்தத்தை துடைத்து விட்டு பந்தாடி வந்திருக்கிறார் பகைவர் கூட்டத்தை. விசிலடி காதைப் பிளக்கிறது. ரசிகர்கள் கலரியில் இருந்து துள்ளிக் குதிக்கிறார்கள். முதலாவதாக 'ஹபரணையில் வெடித்துச் சிதறிய சம்பூர் ஆக்கிரமிப்பு நோக்கம்' என புதினம் தொடக்கி வைத்திருக்கிறது. இனியென்ன.. இந்த ஆகாசப் புழுகர்களும்.. 'கொக்கென்று நினைத்தாயே கொங்கணவா.. நம்ம தலைவரை மக்கென்று நினைத்தாயோ மகிந்த சிங்களவா..' என்று பரணி பாடித் தொலைக்கப் போகிறார்கள்.

# பாரதிபள்ளியின் தமிழ் மாலை 2006

ஒவ்வொரு வருடமும் பாரதி பள்ளி, சிறுவர்களுக்காக நாடகங்கள், இசை நாடகங்களை அரங்கேற்றி வருகின்றது. இந்த நாடகங்கள் சிறுவர்களுக்கு ஏற்றமுறையில் வடிவமைக்கப்பட்டு பாரதிபள்ளி மாணவர்களினால் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

இந்த வருடமும் பாரதிபள்ளி டான்டினொங் வளாக மாணவர்களால் தரம் வாய்ந்த சிறுவர் தமிழ் நிகழ்ச்சியொன்று மேடையேற்றப்பட இருக்கின்றது. இம் மேடையில் பலரின் பாராட்டையும் பெற்ற, மாவை நித்தி தயாரித்து வழங்கும் "படிக்க ஒரு பாடம்" இசை நாடகம், சிறுவர்களுக்காக புவனா ராஜரட்ணம் தயாரித்த வில்லிசை "முனிவரின் சாபம்" என்ற புராணக்கதையும் மற்றும் சிறுவர் பாடல்கள், நாடகங்கள் இடம்பெறவுள்ளது.

தமிழ் மாலை 2006 நிகழ்ச்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு Monash Secondary College, Duerdin St, Clayton னில் நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி குடும்பத்துக்கு $10 மட்டுமே. உங்கள் நுழைவுச் சீட்டுக்களை பாரதிபள்ளியின் சகல வளாகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 98844994 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். தமிழ் மொழி ஆர்வத்தை வளர்க்க, மழலைகளையும் அழைத்து வருமாறு பாரதி பள்ளி வேண்டியுள்ளது.

PERTH
MALAR STORES
Open 7 Days
35A Canara Road,
Westminister,
WA 6061
08 9440 0420
VIDEOS & GROCERIES

*Contd. from page 1*

## உதயம் கிடைக்குமிடங்கள்

**VICTORIA**
* Indo Ceylon Store, Dandenong
* AJM Enterprises, Bundoora
* Dalton Spices, Epping
* Village Pacific Groceries, Lalor
* Oakleigh Spice, Oakleigh
* Essence of East, Kingsway, Glenwaverley
* Elephant House, Glenwaverley
* Banana Leaf, Glenwaverley
* Hindustani, Glenwaverley
* Rich and Spicy, Kingsway, Glenwaverley
* Brindavan Store, Mountwaverley
* Palm Court, Mountwaverley
* Arasan Imports, Carnegie
* Quality Grocery, Glen Huntly
* NuSpice, Clayton
* Sarawan Spices, Clayton
* Asian Spices, Clayton
* Tru Spice, Clayton
* Asian Spices, Clayton
* Dhosais, Clayton
* Kandy Store, Hallam
* Mala Store, Preston
* India Bazaar, Dandenong
* Roshan Fashion, Dandenong
* MKS, Dandenong
* Punjab Sweet, Dandenong
* Shalimar Video, Dandenong
* Little India, Dandenong
* India Bazzar, Dandenong
* Colombo Store, Dandenong
* Athys Jewellers, Dandenong
* Banana Leaf, Dandenong
* Baba Videos, Dandenong
* C.J. Spices & Video, Dandenong
* NGR Spices, Noble Park
* Paradise, Reservoir
* Saree Bazaar, Chelten Ham
* All Spices, Werribee
* Bharat Traders, Footscray
* Fiji Imports, Mooni Pond

**New South Wales**
* Sri Thakshana Enterprises
191 Paramata Rd, Auburn
* Sri Sivasakthi Enterprises, 50 John St, Lidcombe
* Sri Sivasakthi Enterprises
38 Burlington Rd, Homebush
* Sri Durka Enterprises, 5 Joyce St, Pendle Hill
* Spiceland Pty Ltd
Shop 14/22 Henley Road, Homebush West
* Dush Spice, 9/7-10 Joyce St, Pendle Hill
* Udaya Spice Centre
1/76 Station St, Wentworthville
*Serendip Spice & Video
31 Boomerang Place, Seven Hill
* Indo Lanka Spice
Shop 5, 32-38 Memorial Avenue, Liverpool
* Pyramid Video & Spice
114 The Crcent, Homebush West
* Indian & Pacific Market
30B The Crecent, Homebush West
* AUM Spice Centre, 19 The Trand, Croydan

**WESTERN AUSTRALIA**
* India Mart, 311, William St, Northbridge
* Janani Trading
Shop 4,219,Bannister Road,Canning Vale
* Malar Store, 35A,Canara Rd,Westminster
* Maharajah Stores, 145, High Road,Willetton
* Prime Products, 414,William Street,Northbridge
* Bullcreek Oriental Supplies
Daily Supermarket, 537,Beaufort St,Mt.Lawley

WORLD WIDE ACCESS - www.uthayam.net